# பறங்கியர் சமூகம் ஆவணப்படுத்தல்

## அறிமுகமும் பின்புலமும்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ்பேசும் சமூகங்கள் தொடர்பான எல்லா வகையான அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்திப் பாதுகாத்து இலவசமாகத் திறந்த வெளியில் அனைவரும் பயன்பெறும் வகையில் கிடைக்கச்செய்யும் முக்கிய பணியை மேற்கொள்ளும் இலாப நோக்கமற்ற நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை முன்னெடுத்து வருகிறது.

அச்சு ஆவணங்களின் எண்ணிம வடிவங்கள் www.noolaham.org வழியாகவும் பல்லூடக ஆவணங்கள் www.noolaham.media வழியாகவும் திறந்த வெளியில் அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படுகின்றன. எழுத்தாவணங்களில் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், சிறுநூல்கள், மலர்கள், நினைவு மலர்கள் ஆகியனவும் பல்லூடக ஆவணங்களில் ஒளிப்படங்கள், வாய்மொழி வரலாறுகள், பல்லூடக ஆவணங்கள், ஒலிப்பதிவுகள், காணொலிகள், கையெழுத்து ஆவணங்கள், குறுங்கால ஆவணங்கள், கல்வி வளங்கள் போன்றனவும் உள்ளடங்குகின்றன. இந்த ஆவணங்கள் பல்வேறு சிறப்புச் சேகரங்களாகவும் ஆய்வுப்பொருட் சேகரங்களாகவும் தொகுக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்படுகின்றன.

## செயற்றிட்ட அறிமுகம்

பரங்கியர் அல்லது பறங்கியர் (Burghers) எனப்படுவோர் போத்துக்கீச, இடச்சு, பிரித்தானிய வம்சாவளி மற்றும் ஏனைய இலங்கையில் குடியேறிய ஐரோப்பிய ஆண்கள் உள்ளூர் பெண்களை திருமணம் செய்து அதன் மூலம் உருவான ஐரோவாசியா இலங்கையில் உள்ள கலப்பு சிறிய இனக்குழுவினர் ஆவர். இவர்களில் அதிகம் பேர் இலங்கையில் காணப்படுகின்றனர். இன்று இவர்களின் தாய்மொழி ஆங்கிலமாக இருந்தபோதும், இவர்கள் உள்ளூர் மொழிகளையும் அதிகம் பேசுகின்றனர். இலங்கையில் கிரியோல் மொழியின் அடிப்படையில் இவர்கள் பல காலமாக பேசிவரும் இலங்கை போர்த்துக்கீச கிரியோல் மொழி குறிப்பிடத்தக்கது.

1981ம் ஆண்டு இலங்கை குடிசன மதிப்பீட்டின்படி, பரங்கியர் 39,374 பேராக இலங்கையின் மொத்த சனத்தொகையில் 0.2%ஆக காணப்பட்டனர். பரங்கியர் அதிகளவில் கொழும்பு (0.72%), கம்பகா (0.5%) ஆகிய நகரங்களில் காணப்படுகின்றனர். குறிப்பிடத்தக்க அளவானோர் திருகோணமலையிலும் மட்டக்களப்பிலும் காணப்படுகின்றனர்.

இவ்வினத்தவர் அநேகமானோர் உலகிலுள்ள பல சமூகத்தினரிடையே கலந்து காணப்படுகின்றனர்.

## செயற்றிட்ட நோக்கம்

பறங்கியர் சமூகத்தினர் தற்போது அனைத்து சமூகங்களுடனும் கலந்ததான ஒரு வாழ்வியல் போக்கை கொண்டுள்ளனர். அதனால் அவர்களுக்கே உரித்தான கலாசாரம் மற்றும் வாழ்வியல் அம்சங்கள் என்பவற்றில் பிற சமூகங்களது கலாசாரங்களும் தாக்கம் செலுத்துவதனால் அச்சமூகத்தினது தனித்துவத்தை ஆவணப்படுத்தல் மிகவும் அவசியமாகும்.

## செயற்றிட்ட காலவரையறை

இச் செயற்றிட்டமானது ஒரு வருட காலப்பகுதியைக் கொண்டுள்ளது. இக்காலப்பகுதிக்குள் பறங்கியர் சமூகத்தின் வரலாறு, அச்சமூகத்தின் கலாசாரங்கள் மற்றும் நடைமுறைகள் அச்சமூகம் சார் நபர்களது வாய்மொழி வரலாறுகள், மற்றும் ஆளுமைக்குறிப்புகள் என்பவை ஆவணப்படுத்தப்பட்டு இச்செயற்றிட்டத்தின் நோக்கம் பூரணப்படுத்தப்படும்

## எதிர்பாக்கப்படும் செலவீனம்

**LKR 5,476,332**

மேலதிக விபரங்களுக்கு
**[https://docs.google.com/spreadsheets/d/1AKawT6TUJngsNqaIigpdR5Gm4PiZ6FnAWUw4YVRSM8A/edit#gid=1017615132](https://docs.google.com/spreadsheets/d/1AKawT6TUJngsNqaIigpdR5Gm4PiZ6FnAWUw4YVRSM8A/edit#gid=1017615132)**